

# தேவன் உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 15:16; லேவி 18:24–30; 2 தீமோ 4:1,8; யாத் 23:28–30; உபா 20:10, 15–18; ஏசா. 9:6.

**மனன வசனம்:** அந்த ராஜாக்கள் எல்லாரையும் அவர்கள் தேசத்தையும் யோசுவா ஒருமிக்கப் பிடித்தான்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார். யோசுவா 10:42.

யோசுவா புத்தகத்தில் அசௌகரியமான சில காட்சிகள் உள்ளன. ஒரு கூட்ட மக்களிடம் இன்னொரு கூட்ட மக்களை அழிப்பதற்கு தேவன் கட்டளையிட்ட தெய்வீக அல்லது புனித யுத்தங்கள்குறித்து தீவிரமான கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டில் வருகிற தெய்வீக யுத்தங்களைப் புரிந்துகொள்வது கடினம். தேவன் பழைய ஏற்பாட்டில் சர்வமகத்துவமுள்ள கர்த்தராகக் காட்டப்படுகிறார்; ஆகையால், நிகழ்கின்ற அனைத்துமே நேரடியாகவோ மறைமுகமாகவோ அவரது சித்தத்துடன் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான், ‘இதுபோன்ற விஷயங்களை தேவன் எவ்வாறு அனுமதிக்கிறார்?’ என்கிற கேள்வி எழும்புகிறது. கடந்த வாரத்தில், மனித வரலாற்றின் எந்த யுத்தத்தையும்விட மிகப்பெரிய ஒரு யுத்தத்தில் தேவன்தாமே பங்குபெற்றிருப்பதாகப் பார்த்தோம், அந்த யுத்தம் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஊடுருவிச் செல்கிறது. வேதாகம வரலாற்றையும் உலக வரலாற்றையும் இந்தப் போராட்டத்தின் பின்னணியில்தான் புரிந்துகொள்ள முடியும் என்பதையும் பார்த்தோம்.

தேவன் அனுமதித்த போர்களையும், அவற்றின் வரைமுறைகளையும் நிபந்தனைகளையும், சமாதானம்குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் கண்ட இறுதி தரிசனத்தையும், அத்தகையை போர்களின் ஆவிக்குரிய அர்த்தங்களையும் இந்த வாரமும் தொடர்ந்து ஆராய்வோம்.

*2025, நவம்பர் 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கானானியரின் அக்கிரமம்

**கானான் தேசத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்ததில் தேவனுடைய விசால மான திட்டம்பற்றி ஆதி 15:16; லேவி 18:24-30; உபா 18:9-14; எஸ்றா 9:11 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

கானான் குடிகளின் அக்கிரமம்பற்றிப் புரிந்துகொள்ள யோசுவா புத்தகத் தைத் தாண்டிப் பார்க்கவேண்டும். பிள்ளைகளைத் தீக்கடக்கப்பண்ணுதல், குறி பார்த்தல், அஞ்ஞனம் பார்த்தல், மாயவித்தை, பில்லிசூனியம் செய்தல், செத்த வர்களிடத்தில் விசாரித்தல் போன்ற அருவருப்பான நடவடிக்கைகளில் அத் தேசத்தார் ஈடுபட்டார்கள். உபா 18:9-12.

பண்டைய உகாரிடிக் எழுத்துகளின் கண்டுபிடிப்பு (ராஸ் ஷம்ரா எனும் இடத்தில்) கானானிய மார்க்கம் மற்றும் சமுதாயம்பற்றி அதிகம் அறிந்துகொள்ள உதவுகிறது; அதன்மூலம் அந்தக் கலாச்சாரம் அழிவுக்கு நியமிக்கப்பட்ட கார ணத்தைப் புரிந்துகொள்ளமுடிகிறது; பழைய ஏற்பாட்டு ஒழுக்க நெறிகளின்படி அது நியாயமானதாகவும் இருக்கிறது.

'தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் இடையே நடக்கிற பாலுறவால் இயற்கை ஒழுங்கான கருக்தரித்தல், கட்டுப்படுத்தப்படுகிறது' என்கிற நம்பிக் கையின் அடிப்படையில் கானானிய மார்க்கம் அமைந்திருந்தது. அந்தத் தேவர் களின் பாலுறவு செயலை தங்கள் பாலுறவு நடத்தையுடன் சம்பந்தப்படுத்திப் பார்த்தார்கள்; அந்தத் தேவர்களும் தேவதைகளும் பாலுறவில் ஈடுபடத் தூண்டு வதற்கு பாலுறவு சடங்குகளை நடத்தினார்கள். அதனால் தங்கள் மார்க்க நட வடிக்கை களின் ஒரு பகுதியாக, ஆண்களும் பெண்களும் வேசித்தனத்தில் ஈடு படுகிற 'புனித' விபசார நிகழ்ச்சி உருவாக ஏதுவானது.

மக்கள் எப்படிப்பட்ட தேவர்களை வணங்குகிறார்களோ அதற்கு அதிக மான ஒரு ஒழுக்கத்தரத்தை அடைவதற்கு வழியில்லை. கானானியர் தங்கள் தேவர்களைப்பற்றி என்ன புரிந்திருந்திருந்தார்களோ அதற்கேற்றபடி அவர் களது மார்க்க நடவடிக்கைகளில் குழந்தை பலி இடம்பெற்றிருந்தது; அது கூடவே கூடாதென வேதாகமம் எச்சரிக்கிறது.

கானானியக் குடிகள் தங்களுக்கு முதல் பிறக்கிற குழந்தைகளை தாங்கள் வணங்கின பிசாசுகளாகிய தங்கள் தேவர்களுக்குப் பலியிட்டதாக தொல் பொருள் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. பொருத்தனை வார்த்தைகள் பொறிக் கப்பட்ட பெரிய சாடிகளில் குழந்தைகளின் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட் டன; அது அவர்களது இழிவான மார்க்கத்திற்கும், பல குழந்தைகளின் கதி என்னவானது என்பதற்கும் சாட்சியாக இருக்கிறது.

எனவே கானானியர்களை அழிக்கத் தீர்மானித்தது, இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக தேவன் தீர்மானித்தபிறகு எடுக்கப்பட்ட முடிவு அல்ல. கானானின் குடிகளுக்கு தவணையின் காலம் கொடுக்கப்பட்டது; அந்த இரக்கத்தின் காலத்தில், அவர்கள் மத்தியில் வாழ்ந்த கோத்திரப்பிதாக் களுடைய சாட்சிகளின்மூலம் தேவனையும் அவரது குணத்தையும் கண்டுகொள் வதற்கு அவர்களுக்கு வாய்ப்பிருந்தது. ஆனால் அந்த வாய்ப்பை வீணடித்து, தேவன் இறுதியாக அவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கிற வரையிலும் அந்தக் கொடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

# மகத்துவ நீதிபதி

**ஆதி 18:25; சங் 7:11; 50:6; 82:1; 96:10; 2 தீமோ 4:1,8 ஆகிய வசனங்கள் தேவனுடைய ஒழுக்க குணம்பற்றி என்ன சொல்கின்றன? தேவன் பிரபஞ்சத்தின் நியாயாதிபதியாக இருக்கிறார் என்பது இந்த தெய்வீக போர்கள்பற்றிப் புரிந்துகொள்ள எவ்வாறு உதவுகிறது?**

தேவ குணம் பரிசுத்தமானது என்பதால், பாவத்தை அவரால் சகிக்கமுடியாது. அவர் பொறுமையுள்ளவர். ஆனால் பாவத்தின் இறுதி தண்டனை மரணம் என்பதை மாற்றமுடியாது. ரோமர் 6:23. பாவம் இஸ்ரவேலில் இருந்தாலும் அல்லது கானானிய குடிமக்கள் மத்தியில் காணப்பட்டாலும், அதற்கு எதிராக தேவன் போரிட்டார். இஸ்ரவேலாக இருக்கட்டும், தாம் தெரிந்துகொண்ட தேசத்தைத் தண்டிப்பதற்கு அவர் கட்டளையிட்ட மற்ற தேசங்களாக இருக்கட்டும் (உபா 9:4,5; 12:29,30), தெய்வீக போர்களில் ஈடுபட்டதால் அவர்கள் பரிசுத்தமாகிவிடவில்லை. பண்டைய கிழக்கத்திய மக்களுக்கு நிகழாத சம்பவங்கள் இஸ்ரவேலருக்கு நிகழ்ந்திருக்கின்றன; அதாவது, தேவன் அவர்கள் பட்சத்தில் போரிடாமல் அவர்களுக்கு எதிராகப் போரிட்டபோது, அவர்களுடைய எதிரிகள் அவர்களை ஒடுக்கியிருக்கிறார்கள். அதுவும்கூட நேரெதிர் தெய்வீக போர்கள் தாம். ஒப்பிடவும் யோசுவா 7.

தேவன் நியாயாதிபதியாகச் செயல்படுவதின் அடிப்படையில்தான் தெய்வீக போர்களைப் புரிந்துகொள்ளமுடியும். அவ்வாறு பார்த்தால், பிற தேசங்களைப் பிடிக்க இஸ்ரவேலர் மேற்கொண்ட யுத்தங்கள் புதிய வெளிச்சத்தில் புலப்படும். பண்டைய காலத்திலும், ஏன் இன்றும்கூட சுயபெருமைக்கான ஏகாதிபத்திய போர்கள்தாம் தொடுக்கப்படுகின்றன. ஆனால் இஸ்ரவேலர் மேற்கொண்ட போர்கள் அவர்களுக்கு மகிமையைப் பெறுவதற்கு அல்ல, மாறாக தேசத்தில் தேவனுடைய நியாயத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கே. ஆகையால், பரிசுத்த போர்களைப் புரிந்துகொள்ள தேவன் ஆட்சிசெய்வதையும், அவரது சர்வமகத்துவத்தையும் புரிந்துகொள்ளவேண்டும்; இவை இரண்டும் தேவனை ராஜாவாக, நீதிபதியாக, யுத்தத்தில் வல்லவராகச் சித்திரிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

யாவே யுத்தத்தில் வல்லவர் என்றால், ஒரு நியாயாதிபதியாக ஆட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்தி, நிலைநிறுத்தி, பராமரிக்கவேண்டும். அதுதான் அவரது குணத்தின் பிரதிபலிப்பு. தேவன் நியாயாதிபதி, ராஜா என்பதைப் போன்று அவர் யுத்தத்தில் வல்லவர் என்கிற உருவகமும்கூட, அவரது ஒழுங்கிற்கு எதிரான கலகத்தை அவரால் என்றென்றும் சகிக்கமுடியாது என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகையால், யாவேயின் நோக்கம் யுத்தம் செய்வதோ, வெற்றி பெறுவதோ அல்ல, நியாயத்தையும் சமாதானத்தையும் மீண்டும் நிலைநாட்டுவது. ஒரு நடவடிக்கையில் தேவன் மூலகாரணராக இருந்தால், அவர் நியாயந்தீர்க்கிறார், போர் செய்கிறார் அல்லது நியாயத்தை நிலைநாட்டுகிறார் என்று அர்த்தம்.

---

**தேவன் நீதியுள்ள ஒரு நியாயாதிபதி. பரிதானமும் பாரபட்சமும் அவரிடம் எடுபடாது. பாவம், ஒடுக்குதல், குற்றமற்றவர்களின் உபத்திரவம், ஒடுக்கப்பட்டவர்ளின் வியாகுலம் ஆகியவற்றை நிரந்தரமாகப் பொறுத்துக்கொள்ள முடியாத ஒரு தேவன் இருக்கிறார் என்பது எவ்வாறு சுவிசேஷத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாக உள்ளது?**

# துரத்துதலா, சர்வசங்காரமா?

**போரின் நோக்கம், அழிவின் அளவுபற்றி பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துவது என்ன? யாத் 23:28-30; 33:2; 34:11; எண் 33:52; உபா 7:20; யாத் 34:13 ஐயும், உபா 7:5; 9:3; 12:2,3; 31:3, 4 ஐயும் ஒப்பிடுங்கள்.**

---

---

தேவனுடைய ஆதிநோக்கம் கானானியர்களை அழிப்பது அல்ல; அங்கிருந்து துரத்துவதுதான். இஸ்ரவேலர்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு போர்களை ஆராய்ந்தால், வாக்குத்தத்த தேசத்தில் குடியிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது, துரத்துவது, அகற்றுவது போன்ற வார்த்தைகள் வருகின்றன. ஆனால் இஸ்ரவேலர் அந்த அழிவின் வேலையில் ஈடுபடுவதைக் குறிப்பிடும் போது, அஞ்ஞான தொழுகையில் சம்பந்தப்பட்ட உயிரற்ற பொருட்கள், அழிவுக்கு நியமிக்கப்பட்ட பொருட்கள் போன்றவற்றை அழிப்பது சம்பந்தப்பட்ட வார்த்தைகள் வருகின்றன. ஏனென்றால் கானானியருடைய மார்க்கத்தில் அஞ்ஞான தொழுகையிடங்களும் பலிபீடங்களும் முக்கிய ஸ்தலங்களாக இருந்தன.

தெய்வீக போர்கள் கானானியரின் சீர்கெட்ட கலாச்சாரத்திற்கும் சமுதாயத்திற்கும் எதிராகத் தொடுக்கப்பட்டவை. இஸ்ரவேலர் தீட்டுப்படாதபடிக்கு, அந்தச் சீர்கேட்டைப் பரவச்செய்கிற அனைத்து விஷயங்களையும் அழிக்க வேண்டியிருந்தது. ஆனாலும், அங்கிருந்த ஒவ்வொரு நபரும், தேவனுடைய சர்வமகத்துவத்தை உணர்ந்த அனைவரும் அந்தப் போருக்கு முன்னரும், அல்லது போரின்போதும் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து, தப்பித்துக்கொள்ள வழியிருந்தது. யோசுவா 2:9-14; ஒப்பிடவும் நியா 1:24-26. ஆனால் கானானின் அரணான பட்டணங்களுக்குள் இருந்துகொண்டு, இஸ்ரவேலரைக்குறித்த தேவ திட்டத்திற்கு எதிராக விடாப்பிடியுடன் கலகம்செய்து, தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தின கானானியர்கள்மட்டுமே அழிவுக்கு நியமிக்கப்பட்டார்கள். யோசுவா 11:19,20.

இருந்தாலும் இது ஒரு கேள்வியை எழுப்புகிறது: கானானைப் பிடிக்கச் சொன்னதின் முக்கிய நோக்கம் அதன் குடிகளை வெளியே துரத்துவதுதான், அழிப்பதல்ல என்றால், இஸ்ரவேலர்கள் ஏன் ஏராளமான மக்களைக் கொன்றிருக்கவேண்டும்?

கானானைப் பிடிப்பது சம்பந்தப்பட்ட வேதாகம வசனங்களை ஆராயும் போது, அந்தப் போரின் மெய்யான நோக்கம் கானானிய மக்களை அங்கிருந்து விரட்டுவதுதான்என்பது தெரிகிறது. ஆனாலும், எகிப்தின்பார்வோனைப்போல, பெரும்பாலான கானானியர்கள், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினார்கள்; அந்தக் கலாச்சாரத்துடன் ஒன்றரக் கலந்தார்கள்; அதனால் அந்தக் கலாச்சாரத்தை அழிக்கும்போது, அவர்களையும் அழிக்கவேண்டியதாயிற்று.

---

**உங்களுடைய குணத்திலும் பழக்கவழக்கங்களிலும் எந்தெந்த விஷயங்களைப் பிடுங்கி, அழிக்க வேண்டியுள்ளது?**

# தெரிந்துகொள்கிற சுதந்திரம்

**உபாகமத்தில் சொல்லப்பட்டுள்ள போர்ச்சட்டமும், ஒரு விக்கிரகாராதனை பட்டணத்திற்கு எதிரான நடைமுறையும், இஸ்ரவேலர் ஈடுபட்டிருந்த போரில் முழுமையான அழிவின் வரம்புகளைப் புரிந்துகொள்ள நமக்கு எவ்வாறு உதவுகின்றன? உபா 20:10,15-18; 13:12-18; யோசுவா 10:40.**

போரில் மக்களை அழிப்பதைச் சுட்டிக்காட்ட *கெரெம்* என்கிற எபிரெய வார்த்தை பயன்படுகிறது. 'தடைசெய்யப்பட்டதை,' 'சபிக்கப்பட்டதை,' அல்லது 'அழிவுக்கு அர்ப்பணிக்கப்பட்டதை'அழிப்பது என்று அர்த்தம். அது, தேவனுடைய பிரத்தியேக தீர்மானத்தின்படி, மக்களையும் மிருகங்களையும் அல்லது உயிரற்ற பொருட்களையும் திரும்ப வரவே முடியாத அளவுக்கு முற்றிலும் தள்ளுவதைக் குறிக்கிறது; அது போராக இருந்தால், முற்றிலும் அழிப்பதைக் குறிக்கிறது. போரில் மக்களை முழுமையாக அழிக்கிற *கெரெம்* என்கிற கருத்தையும் நடவடிக்கையையும் பிரபஞ்சத்தில் தீமையின் வல்லமைகளுடன் யாவே போரிட்டு வருவதின் பின்னணியில் புரிந்துகொள்ள வேண்டும்; ஏனென்றால் அது தேவனுடைய குணமும் நற்பெயரும் சம்பந்தப்பட்ட போர்.

எனவே, அந்தப் போர் துவங்கியதுமுதல் நடுநிலைக்கே வாய்ப்பில்லை; தேவன் பக்கமோ அவருக்கு எதிராகவோ இருந்தாகவேண்டும். ஒன்று ஜீவனாகிய நித்திய ஜீவனுக்கும், இன்னொன்று மரணமாகிய நித்திய மரணத்திற்கும் வழிநடத்துகிறது.

முழு அழிவு நடைமுறையானது பாவத்திற்கும் தீமைக்கும் எதிரான தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை எடுத்துக்காட்டுகிறது. தேவன் தம் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுகிற வேலைக்கு தாம் தெரிந்துகொண்ட மக்களான பண்டைய இஸ்ரவேலை நியமித்தார். இம்மியளவும் நீதிவிலகாத தம் ராஜ்யத்தின் விதிப்படி அந்த முழு அழிவை அனுமதித்தார்; வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலத்தில், கானான் என்று திட்டமாகச் சொல்லப்படுகிற ஒரு நிலப்பகுதியில் அந்தப் போர் நடைபெற்றது. இவ்வாறு அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்கள் தேவ நோக்கங்களுக்கு எதிராக தொடர்ந்து கலகம்செய்தார்கள், அவற்றிற்கு எதிர்த்து நின்றார்கள், மனந்திரும்பவில்லை என்று பார்த்தோம். ஆகையால், அவர்களை அழிக்க தேவன் தீர்மானித்தது தன்னிச்சையானதோ தேசியரீதியானதோ அல்ல.

மேலும், கானானியர்களின் வாழ்க்கைமுறையைப் பின்பற்றத் தீர்மானித்தால் இஸ்ரவேலருக்கும் அதே முடிவுதான் காத்திருந்தது. உபா 13. அந்தத் தெய்வீகப் போரில் இஸ்ரவேலர் தேசத்தைச் சுதந்தரிக்கவும், கானானியர்கள் அழிக்கப்படவும் முன்னரே தீர்மானிக்கப்பட்டதுபோலத் தெரியலாம்; ஆனால் இந்நிலை நேரெதிராக மாறவும் சாத்தியமிருந்தது; ராகாப், ஆகான், கிபியோனியர்கள் அனுபவத்தில் அதைப் பார்க்கலாம். தன்னிச்சையாக யாருக்கும் பாதுகாப்போ அழிவோ கொடுக்கப்படவில்லை. யாவேயுடனான உறவால் நன்மையை அனுபவித்தவர்கள், கலகம் செய்தால் அந்தச் சிலாக்கியத்தை இழக்கக்கூடும்; தடையின்கீழ் இருப்பவர்கள் யாவேயின் அதிகாரத்திற்கு அர்ப்பணித்தால், வாழலாம்.

---

**கானானியர்கள் தேவனை எதிர்த்து நின்றது, இன்று நமக்குக் கற்றுக்கொடுக்கிற ஆவிக்குரிய பாடம் என்ன? அதாவது, நம் சுயாதீனத் தீர்மானங்களால் தனிப்பட்ட விதத்தில் நமக்கு எப்படிப்பட்ட விளைவுகள் உண்டாகலாம்?**

# சமாதானப் பிரபு

**தேவன் தம் மக்களுக்குத் திட்டமிட்டுள்ள எதிர்காலம்பற்றி ஏசா 9:6; 11:1-5; 60:17; ஓசியா 2:18; மீகா 4:3 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

இந்தவாரப் பாடத்தின் முக்கியநோக்கம் பழைய ஏற்பாட்டில் தேவன் கட்டளையிட்டு, உதவிசெய்த போர்கள்பற்றி ஆராய்வது என்றாலும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகங்களில் இதே முக்கியத்துவத்துடன் சொல்லப்படுகிற இன்னொரு கருத்தையும் ஆராயவேண்டும்; அது, சமாதானம் நிறைந்த, மேசிய யுகம்குறித்த எதிர்கால தரிசனமாகும். மேசியா 'சமாதானப் பிரபு' என்று அழைக்கப்படுகிறார். ஏசா 9:6. அவர் சமாதானம் ஆட்சிசெய்கிற ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார், அங்கே ஆட்டுக்குட்டியும் சிங்கமும் கூடிமேயும். ஏசா 11:1-8. அங்கே அழிவோ வேதனையோ இருக்காது. ஏசா 11:9. சமாதானம் ஆட்சிசெய்யும். ஏசா 60:17. அது நதிபோலப் பாயும். ஏசா 66:12.

**தம் மக்களையும் மனுகுலத்தையும்குறித்த தேவனுடைய ஆழமான நோக்கங்களைப் புரிந்துகொள்ள 2இராஜா 6:16-23 எவ்வாறு உதவுகிறது?**

எலிசா சொன்னதின்பேரில் சீரிய படைவீரர்களுக்கு விருந்தளிக்கப்பட்ட சம்பவத்தை வாசியுங்கள். அவர்களை படுகொலை செய்வதற்கு பதிலாக (2இராஜா 6:22), இலட்சிய சமாதான நடத்தை எதுவென அவர்களுக்குக் காண்பித்தார்; அப்படிப்பட்ட ஒரு நிலையில் தம் மக்கள் இருக்கவே தேவன் விரும்புகிறார். எதிரிகளைச் சூழ்ந்திருந்த கண்ணுக்குப் புலப்படாத சேனை எவ்வளவு வல்லமைபடைத்தது என்பதை எலிசா உணர்ந்திருந்தார். 2இராஜா 6:17. நம் பூமியையும்பாதித்துள்ள ஒருபிரபஞ்சப்போராட்டத்தில்தேவன்ஈடுபட்டிருப்பது உண்மையாக இருந்தாலும், மீட்பின் இறுதி இலக்கு முடிவே இல்லாத சண்டையோ, சதாகாலமும் எதிரிகளை அடிமை நிலையிலேயே வைத்திருப்பதோ அல்ல, மாறாக நித்திய சமாதானமாகும். வன்முறை வன்முறையைப் பிறப்பிப்பதுபோல, சமாதானம் சமாதானத்தைப் பிறப்பிக்கிறது. 'சீரியரின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே அப்புறம் வரவில்லை' என்று அந்தச் சம்பவம் முடிகிறது. 2இராஜா 6:23.

**இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி நாம் எந்தெந்த வழிகளிலெல்லாம் சமாதானத்தின் ஏதுகரங்களாக இருக்கலாமென யோசியுங்கள். உங்களுடைய வாழ்க்கை தற்சமயம் எப்படி இருக்கிறது? நீங்கள் எப்படிப்பட்ட போராட்டங்களில் இருந்தாலும், எந்தெந்த வழிகளிலெல்லாம் சர்ச்சையின் ஏதுகரமாக அல்லாமல், சமாதானத்தின் ஏதுகரமாக இருக்கலாம்?**

# மேலும் படிக்க:

வேதாகமத்தின் மற்ற சம்பவங்களைப்போல இந்தச் சம்பவத்திலும் அதன் கருத்தையும் பின்னணியையும் புரிந்துகொள்ளவேண்டியது அவசியம். கானானியருக்கு எதிரான யுத்தங்களைப் புரிந்துகொள்ள பிரபஞ்சப்போராட்டத்தையும், தேவன் நியாயாதிபதி என்பதை அறிந்திருப்பதும் அவசியம்.

'தேவன் நீடிய சாந்தமுள்ளவர். துன்மார்க்க தேசங்கள் தம்மையும் தம் குணத்தையும் அறிந்துகொள்ளும்படி தவணையின் காலத்தைக் கொடுத்தார். கொடுக்கப்பட்ட வெளிச்சத்தின்படி, அவர்கள் ஒளியைப் பெற மறுத்து, தேவனுடைய வழிகளைவிட தங்கள் சொந்த வழிகளைத் தேர்ந்தெடுத்ததற்காக குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டார்கள். கானானியரை ஏன் உடனடியாக அங்கிருந்து துரத்தவில்லை என்பதற்கு தேவன் காரணம் சொன்னார். எமோரியரின் அக்கிரமம் நிறைவாகவில்லை. அவர்கள் அக்கிரமத்தில் பெருகியதால், இனியும் தேவனால் நீடிய பொறுமையுடன் இருக்கமுடியாது, அவர்கள் முற்றிலும் அழிக்கப்படவேண்டும் என்கிற நிலைக்கு வந்தார்கள். அந்த நிலையை எட்டுமளவிற்கு, அவர்களது அக்கிரமம் நிறைவாகிற வரையிலும் தேவன் பழிவாங்காமல் தாமதித்தார். எல்லா தேசங்களுக்கும் ஒரு தவணையின்காலம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய பிரமாணத்தை மதிக்காதவர்கள், துன்மார்க்கத்தில் ஒரு கட்டத்திலிருந்து அடுத்தக் கட்டத்திற்குச் செல்வார்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் கலக ஆவியைச் சுதந்தரித்து, தேவ கோபம் தங்கள்மீது விழும்வரையிலும் தங்கள் பிதாக்களைவிட மோசமாக நடந்துகொள்வார்கள். அதனால் தண்டனை தாமதிக்கப்படுகிறதே தவிர, கொடுக்கப்படாமல் போவதில்லை'[1].

[1] Ellen G. White Comments, The SDA Bible Commentary, vol. 2, p. 1005.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவன் நம்முடைய நியாயாதிபதியாகவும், பிரபஞ்சத்தின் தலைமை நியாயாதிபதியாகவும் இருப்பதால் உண்டாகிற நன்மைகள் என்ன? தேவனே நியாயாதிபதி என்கிற உண்மை ஏன் சுவிசேஷத்திற்கும் நம் இரட்சிப்பிற்கும் அடிப்படையாக இருக்கிறது?*

2. *தேவனுடைய பொறுமை, நியாயம்பற்றி அறிந்துகொள்ள கானானியரின் அனுபவம் எவ்வாறு உதவுகிறது? நம் சகமனிதர்களை நாம் நடத்துகிற விதத்தில் தேவனுடைய குணத்தை எவ்வாறு பிரதிபலிக்கமுடியும்?*

3. *சுயாதீன சித்தத்தின் அடிப்படைத் தன்மைபற்றி யோசியுங்கள். தெரிந்துகொள்கிற நம் சுதந்தரத்தை தேவன் மதிப்பது ஏன்? அன்பும் தெரிந்துகொள்கிற உரிமையும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புபட்டுள்ளன?*

3. *போர், சச்சரவு சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள் பழைய ஏற்பாட்டில் இருந்தாலும், இறுதியில் சமாதானம் நிலவுகிற காட்சிதான் காட்டப்படுகிறது. தங்களுடைய சுற்றுப்புறத்தில் சமாதானத்தை ஸ்தாபிப்பதில் கிறிஸ்தவர்கள் என்ன பங்காற்ற வேண்டும்?*

# ‘இது விபத்து அல்ல’

**லாரி டென்ஸ்கி-ஸ்னைமேன்**

தென் ஆசியாவிலுள்ள ஒரு பெரிய நகரத்தில் ஊழியம்செய்து வந்த மரியாவும் டேவிட்டும் ஒரு நபருடைய வீட்டிற்குச் சென்றிருந்தார்கள். அந்த நபரின் மனைவி டேவிட்டின் நம்பிக்கைபற்றி கேள்விகள் கேட்டார். டேவிட் சொன்ன பதிலை அந்த நபர் தன் கைபேசியில் பதிவு செய்தார். அந்த நபரின்முகபாவனை மரியாவுக்கு சற்று பயத்தைக் கொடுத்தது.

“நான் ஏற்கனவே சொன்னதுபோல நாங்கள் செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்கள்” என்று டேவிட் சொன்னார். “அப்படியானால் நீங்கள் கிறிஸ்தவர்களா?” என்று அந்த நபர் கேட்டார்.

டேவிட் மனதிற்குள் ஜெபித்தார். அந்த நாட்டில் அநேகர் கிறிஸ்தவமார்க்கத்தை விரும்பாதவர்கள். ஏனென்றால் தங்கள் மதம் தடைசெய்த மதுபானம், அசுத்தமான உணவுகள் ஆகியவற்றை கிறிஸ்தவர்கள் பலர் உட்கொண்டது அவர்களுக்குப் பிடிக்கதில்லை.

உடனே டேவிட், “நான் விளக்கமாகச் சொல்கிறேன். உபா 6:4 உட்பட்ட வேதவசனங்கள் சொல்கிற ‘நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்’ என்கிற உண்மையை நாங்கள் நம்புகிறோம்! ஒரே தேவன் உண்டென்பதை நம்புகிறோம்” என்று சொன்னார்.

உடனே அந்த நபர், “சுவாரஸ்யம்” என்றார். “வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் தொடங்கி, சனிக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் முடிகிற ஓய்வுநாளில்தான் தேவனை நாம் ஆராதிக்கவேண்டும் என்று டோராவில் சொல்லப்பட்டுள்ள கட்டளையையும் நம்புகிறோம்” என்று டேவிட் சொன்னார். பிறகு பன்றிறைச்சியை தேவன் தடைசெய்திருப்பதுபற்றி ஏசா 66:17 சொல்வது குறித்தும் பேசினார். அந்த நபரது கடுகடுப்பு மெல்லிய புன்னகையாக மாறியது.

டேவிட் தொடர்ந்து, “நம் சரீரங்கள் தேவனுடைய ஆலயமாக இருப்பதையும் நம்புகிறோம், அவை நமக்கு கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பூமியில் இருக்கும்போது அவற்றை நாம் பராமரிக்க வேண்டும்” என்று கூறினார்.

“புகைப்பழக்கம் அல்லது மதுப்பழக்கத்தால் நம் உடலுக்குத் தீங்குசெய்யக்கூடாது” என்று சொன்னார்.

உடனே அந்த நபர், “நம்முடைய சந்திப்பை தேவனே ஏற்பாடு செய்திருக்கிறார்” என்று சொல்லிவிட்டு, எழுந்துபோய் உணவு எடுத்துவந்தார். அதை மேசைமீது வைத்து, வந்திருந்தவர்களைச் சாப்பிடும்படி கூறினார். “இது விபத்தான சந்திப்பு அல்ல, இது தேவன் ஏற்பாடு செய்த சந்திப்பு” என்று மீண்டும் கூறினார்.

பிறகு, எதிர்பாராத அந்தச் சந்திப்புக்காக நன்றி கூறியும், உணவை ஆசீர்வதிக்க வேண்டியும் ஜெபித்தார். பிறகு பின்புற அறையில் இருந்த தன் மகனை அழைத்து வந்து, “இவர்களை நீ சந்திக்கவேண்டும்” என்று சொன்னார். பிறகு மரியா மற்றும் டேவிட்டிடம் திரும்பி, “என் குடும்பத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்” என்று கூறினார். மேலும் தானும் தன் குடும்பத்தாரும் உபவாசத்தில் இருந்ததால், உங்களோடு சேரந்து சாப்பிடமுடியவில்லை என்று வருத்தம் தெரிவித்தார். வந்திருந்தவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில், மாபெரும் போராட்டம்பற்றி பல கேள்விகளைக் கேட்டார். அவர்கள் சொன்ன பதில்களை பாராட்டுகிற வகையில் பேசினார்.